# தேசிய

# வரவு செலவுத்திட்டம்

# 2025

## மக்கள் வரவுசெலவுத்திட்டம்

வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தின் இலகுபடுத்தப்பட்ட பதிப்பு



நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

நிதி, திட்டமிடல் மற்றும்
பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

# தேசிய
# வரவு செலவுத்திட்டம்
# 2025
## மக்கள் வரவுசெலவுத்திட்டம்

**வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தின் இலகுபடுத்தப்பட்ட பதிப்பு**

2025.03.21 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டவாறு

தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்

மார்ச் 2025

# மக்கள் வரவுசெலவுத்திட்டம் 2025

என்றால் என்ன?





வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பது அரசியலமைப்பின் தேவைப்பாடு ஒன்றாகும் (அரசியலமைப்பின் உறுப்புரை 148 -152). 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடானது 2025 ஆம் ஆண்டில் அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் ஒவ்வொன்றுக்கு மான செலவின வரையறைகளையும் அச் செலவினங்களுக்கு நிதியளிப்பதற்கான முன்மொழியப்பட்ட வழிமுறைகளையும் அடங்கும். இந்த மதிப்பீடுகள் பொது மக்கள் எளிதில் புரிந்து கொள்ள முடியாதளவு சிக்கலான கணக்கீட்டு வடிவத்தில் வழங்கப்படுகிறது.

எனவே, தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களமானது, அரசாங்க வரவு செலவுத் திட்டம் பற்றிய தகவல்களை எளிமைப்படுத்தப்பட்ட மற்றும் தொழில்நுட்ப விடயங்களைக் குறைத்து வழங்குவதற்கு உத்தேசித்துள்ளது. மேலும், வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தின் முக்கிய விடயங்களைத் தொகுத்து, வெளிப்படையாகவும், எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய வகையிலும் பொது மக்களுக்கு ஏற்ற பதிப் பொன்று முன்வைக்கப்பட வேண்டும் என்று பொது நிதி முகாமைத்துவச் சட்டத்தின் 20 ஆம் பிரிவு குறிப்பிடுகின்றது. இதன் மூலம், அனைத்து பிரசைகளும் வரி செலுத்துவோரும் வரி வமானம் எவ்வாறு செலவிடப்படுகிறது என்பதையும், இந்த வளங்களை உகந்த முறையில் ஒதுக்குவதில் அரசாங்கத்தின் முன்னுரிமைகளையும் நன்கு புரிந்து கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த முன்முயற்சியானது வள ஒதுக்கீடு மற்றும் அதன் திறமையான பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் அதிக வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கு வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் செலவினத் தலைப்புகள் என வகைப்படுத்தப்பட்ட மதிப்பீடுகளை முன்வைப்பதற்குப் பதிலாக, இந்த வெளியீடு துறை வாரியாக முக்கிய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அரசாங்க செலவினம் பற்றிய எளிமையான தகவல்களை வழங்குகிறது. மேலும், படுகடன் மீள்கொடுப்பனவுகள் மற்றும் எதிர்பாரா சேவைகளுக்கான ஏற்பாடுகள் இத் துறைகளின் கீழ் கவனத்திற் கொள்ளப்படவில்லை. எளிதாகக் குறிப்பிடுவதாயின், துறைசார் மொத்தங்களின் ரூபா விவரங்கள் அண்மைய பில்லியனாக அண்ணளவாக மாற்றப்பட்டுள்ளன. எனவே, கணக்கீட்டு வடிவத்திலுள்ள புள்ளிவிவரங்களுடன் ஒப்பிடுகையில் சிறிய முரண்பாடுகள் இருக்கலாம்.

வரவு செலவுத்திட்ட உரைக்குப் பின்னர் இந்த ஆவணம் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளையும் சேர்த்து இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. பார்வைக் குறைபாடுள்ளவர்கள் கூட எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் இந்த ஆவணம் யுனிகோட் எழுத்துருவிலும் வெளியிடப்பட்டுள்ளது.

2025

# தேசிய வரவுசெலவு திட்டத்தைத் தயாரிப்பதற்கான அடிப்படைகள்

ஒரு குறித்த நிதியாண்டில் அரசாங்கத்தினால் செலவிடப்படவுள்ள செலவினங்களை அங்கீகரிப்பதற்காகவும், அந்த ஆண்டில் அரசாங்கத்தின் கடன் பெறுகைகளை அங்கீகரிப்பதற்காகவும், அந்த ஆண்டில் பொதுச் செலவினங்களை முகாமை செய்வதற்கான சில ஏற்பாடுகளைச் செய்யவும் பாராளுமன்றம் ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை அங்கீகாரிக்கின்றது. அதற்கமைய 2025 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுதிட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு பின்வரும் வழிகாட்டுதல்கள் பயன்படுத்தப்பட்டன.

1. வளமான நாடு, அழகான வாழ்க்கை - தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடணம்.
2. 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பொது நிதி முகாமைத்துவச் சட்டத்தின் கட்டளைகளைப் பின்பற்றுதல்.
   - சம்பந்தப்பட்ட நிதியாண்டிற்கான மதிப்பிடப்பட்ட பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13%க்கு மேல் அரசாங்கத்தின் ஆரம்ப செலவினம் இருக்கக்கூடாது (சட்டத்தின் பிரிவு 15)
   - வருடாந்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கு, முதன்மைச் செலவினத்தின் முன்மொழியப்பட்ட மதிப்பீட்டில் இரண்டு சதவீதத்தை விஞ்சாதிருத்தல் வேண்டும் (சட்டத்தின் பிரிவு 25)

**நடுத்தரக் கால பேர் அரசிறைக் கட்டமைப்பு - 2023-2028** மொ.தே. உ%

| சுட்டிகள் | 2023 (உண்மையான) | 2024 (தற்காலிக) | எதிர்வுகூறல்கள் 2025 | 2026 | 2027 | 2028 |
|---|---|---|---|---|---|---|
| **மொத்த வருமானம் மற்றும் மானியம்** | 11.1 | 13.6 | **15.1** | 15.1 | 15.2 | 15.3 |
| மொத்த வருமானம் | 11.0 | 13.4 | **15.0** | 15.0 | 15.1 | 15.2 |
| வரி வருமானம் | 9.8 | 12.3 | **13.9** | 13.9 | 13.9 | 14.2 |
| வரியல்லா வருமானம் | 1.2 | 1.1 | **1.1** | 1.1 | 1.1 | 1.1 |
| **மொத்த செலவு** | 19.4 | 20.4 | **21.8** | 19.6 | 19.1 | 19.0 |
| மீண்ம் சலெவினம் | 17.0 | 17.8 | **17.8** | 15.5 | 15.0 | 14.8 |
| மூலதன செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் | 2.4 | 2.6 | **4.0** | 4.1 | 4.1 | 4.2 |
| நடைமுறை கணக்கு மீதி | -6.0 | -4.4 | **-2.8** | -0.5 | 0.1 | 0.4 |
| ஆரம்ப மீதி | 0.6 | 2.2 | **2.3** | 2.3 | 2.3 | 2.4 |
| வரவுசலெவுதிட்ட பற்றாகுறை | -8.3 | -6.8 | **-6.7** | -4.5 | -4.0 | -3.7 |

மூலம் : அரசிறைக்கொள்கைத் திணைக்களம்

# வருமானம் மற்றும் செலவினம்



## அரசாங்க வருமானம்

அரசாங்கத்தின் பிரதான வருமானமானது வரி வருமானம் மற்றும் வரி அல்லாத வருமானம் என 02 முக்கிய கூறுகளைக் கொண்டுள்ளதுடன், 2025 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட மொத்த வருமானம் ரூபா 4,990 பில்லியனாகும். இதில் ரூபா 4,590 பில்லியன் வரி வருமானமாகவும், ரூபா 370 பில்லியன் மற்றும் ரூபா 30 பில்லியன் வரியில்லா வருமானம், மானியங்களாகவும் எதிர்பார்க்கப்படுகின்றது. வரி வருமானமானது, பிரதானமாக வருமான வரி, பெறுமதி சேர் வரி, வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரிகள் மற்றும் மது வரி ஆகியவற்றைக் கொண்டிருக்கும் அதே வேளை, வரி அல்லாத வருமானம், பிரதானமாக கட்டணங்கள் மற்றும் அறவீடுகள், பங்கிலாபங்கள், இலாபங்கள், வாடகைகள் ஆகியவற்றினை கொண்டுள்ளது.



## அரசாங்க செலவினம்

2025 ஆம் ஆண்டிற்கான, படுகடன் மீள்கொடுப்பனவு உட்பட, அரசாங்க செலவினம் ரூபா 8,835 பில்லியன் என்பதுடன், இதில் ரூபா 4,550 பில்லியன் படுகடன் மீள்கொடுப்பனவுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ரூபா 2,950 பில்லியன் கடன் வட்டி செலுத்துவதற்கும் ரூபா 1,600 பில்லியன் கடன் திருப்பிச் செலுத்துவதற்குமாகும். மேலும், ஆரம்ப செலவினம் ரூபா 4,285 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆரம்ப செலவினமானது, சம்பளம் மற்றும் வேதனாதிகள் (ரூபா 1,352 பில்லியன்), ஓய்வூதியங்கள் (ரூபா 442 பில்லியன்), அஸ்வெசும (ரூபா 233 பில்லியன்), பிற மீண்டெழும் (ரூபா 943 பில்லியன்) மற்றும் மூலதனச் செலவு (ரூபா 1,315 பில்லியன்) ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

## விரிவான வரவுசெலவு திட்ட மதிப்பீடுகள் மற்றும் மக்கள் வரவுசெலவு திட்டக் கட்டமைப்பு

2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளில் செலவினமானது, 24 அமைச்சுக்கள், 134 திணைக்களங்கள் மற்றும் 21 விசேட செலவின அலகுகளின் கீழ் செலவுகள் சேர்க்கப்பட்டுள்ளன. மக்கள் வரவு செலவுத் திட்டம் குடிமக்களுக்கு எளிதாக விளங்கும் வகையில் 12 துறைகளில் அனைத்து செலவினங்களையும் சுருக்கமாகக் கூறுகிறது. மேலும், டிஜிட்டல் மயமாக்கல், பராமரிப்பு, புனர்வாழ்வு மற்றும் மேம்பாடு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி போன்ற பன்முக முயற்சிகள் ஒவ்வொரு செலவினத் தலைப்பிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு மேலதிக தகவலுக்காக புத்தகத்தின் கடைசி பகுதியில் பதிவிடப்பட்டுள்து.



# ஒரே பார்வையில் வரவுசெலவுத்திட்டம் 2025

| | |
|---|---|
| ரூபா 604 பில்லியன் | ஆரோக்கியமான சமூகமொன்றினை நோக்கிய ஆரோக்கிய வாழ்வு |
| ரூபா 620 பில்லியன் | கல்வியில் தரம், சமத்துவம் மற்றும் சிறந்து விளங்குதல் |
| ரூபா 499 பில்லியன் | பாதுகாப்பான, வினைதிறனான, சுற்றுச்சூழல் நட்புடைய மற்றும் நிலைபேறான போக்குவரத்து சேவைகள் |
| ரூபா 185 பில்லியன் | கண்ணியமான, வசதியான வாழ்க்கையின் ஆவலுக்கான ஒத்துழைப்பு |
| ரூபா 264 பில்லியன் | நாட்டின் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை மேம்படுத்த உற்பத்தித்திறன் கொண்ட, நவீனமயப்படுத்திய நிலைபேறான விவசாயம் |
| ரூபா 45 பில்லியன் | என்றும் பசுமையான வாழ்க்கையை நோக்கி |
| ரூபா 280 பில்லியன் | அமைதியான மற்றும் நியாயமான சமூகத்திற்கான அர்ப்பணிப்பு |
| ரூபா 404 பில்லியன் | தேசிய பாதுகாப்பு |
| ரூபா 103 பில்லியன் | பொருளாதார சேவைகளும் தொழில்முனைவும் |
| ரூபா 21 பில்லியன் | நிலையான மற்றும் பாதுகாப்பான எரிசக்தி விநியோகம் |
| ரூபா 446 பில்லியன் | மக்கள் நட்பு அரச சேவை |
| ரூபா 775 பில்லியன் | உலகளாவிய சமூகப் பாதுகாப்பு முறைமை |

# ஆரோக்கியமான
# சமூகமொன்றினை
# நோக்கிய
# ஆரோக்கிய வாழ்வு



# நாடளாவிய வைத்தியசாலைகள் வலையமைப்பு

03 தேசிய வைத்தியசாலைகள், 11 போதனா வைத்தியசாலைகள், 18 விசேட வைத்தியசாலைகள், 20 மாவட்ட பொது வைத்தியசாலைகள், 80 தள வைத்தியசாலைகள், 486 பிரதேச மருத்துவமனைகள், 545 ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவுகள், 356 **சுகாதார மருத்துவ அலுவலகங்கள்** ஆகியவற்றை தொழிற்படுத்துவதன் மூலம் நாட்டுக்கான சுகாதார சேவைகளை வழங்குதல்.

சுகாதாரம் தொடர்பான நிறுவனங்களில் 23,936 மருத்துவர்கள், 38,969 தாதியர்கள், 8,646 மருத்துவச்சிகள், 35,405 சுகாதார உதவியாளர்கள், 2,068 மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள், 2,123 பொது சுகாதார பரிசோதகர்களை பணியாற்றச் செய்தல்.

**2025 இற்கு ரூபா 604 பில்லியன்**

மீண்டெழும் செலவினம்
ரூபா **496.5** பில்லியன்

மூலதன செலவினம்
ரூபா **107.3** பில்லியன்

ரூபா **40.0** பில்லியன்
வைத்தியசாலை அபிவிருத்தி

ரூபா **319.8** பில்லியன்
மருத்துவமனை தொழிற்பாடு

ரூபா **5.8** பில்லியன்
சுதேச மருத்துவ அபிவிருத்தி

ரூபா **185.0** பில்லியன்
மருத்துவ வழங்கல்கள்

ரூபா **12.5** பில்லியன்
திரிபோஷ உட்பட ஊட்டச்சத்து

ரூபா **12.6** பில்லியன்
நோய்த் தடுப்பு நடவடிக்கைகள்

ரூபா **0.9** பில்லியன்
சுகாதார ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

ரூபா **22.4** பில்லியன்
சுகாதார ஊழியர்களின் திறன் விருத்தி

ரூபா **4.9** பில்லியன்
சுவசெரிய அம்பியுலன்ஸ் சேவை

# பிரதான செலவின விடயங்கள்

### மருத்துவமனை தொழிற்பாடு

- சுகாதாரத் துறையில் ஆள்சார் வேதனாதிகளுக்கு ரூபா 210.6 பில்லியன்
- ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமை மேம்பாட்டுத் திட்டத்திற்கு - மத்திய அரசு மற்றும் மாகாண சபைகள் ரூபா 12.2 பில்லியன்
- சுகாதார முறைமை மேம்பாட்டுக்கு - ரூபா 9.3 பில்லியன்
- மருத்துவமனைகளுக்கு உணவு மற்றும் சீருடைகளை வழங்குவதற்கு ரூபா 7.2 பில்லியன்

### மருந்துப் பொருள் வழங்கல் மற்றும் உயிரியல் மருத்துவ உபகரணங்கள்

- மருத்துவமனைகளுக்கு மருந்துப் பொருட்கள் கொள்வனவுக்கு ரூபா 183.8 பில்லியன்
- உயிரியல் மருத்துவ உபகரணங்களை கொள்வனவுக்கு ரூபா 13.3 பில்லியன்

### நோய் தடுப்பு முயற்சிகள்

- சுகாதாரத் தகவல் மற்றும் தர மேம்பாட்டிற்கு ரூபா 6.6 பில்லியன்
- தொற்றுநோய் மற்றும் தொற்றா நோய்களைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் ரூபா 1.4 பில்லியன்

### பயிற்சிகள்

- வைத்தியர்களின் பட்டப்பின் படிப்பு பயிற்சி களுக்கு ரூபா 2.0 பில்லியன்

### மருத்துவமனை நிர்மாணம்

- சிலாபம், அம்பாறை, கேகாலை, கண்டி, திருகோணமலை மருத்துவமனைகளில் ETU கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 1.5 பில்லியன்
- இரத்தினபுரி போதனா மருத்துவமனையில் புதிய புற்றுநோயியல் பிரிவு நிர்மாணிப்பதற்காக ரூபா 0.25 பில்லியன்
- கண்டி போதனா மருத்துவமனையில் புற்றுநோய் மருத்துவமனை நிர்மாணிப்பதற்காக ரூபா 0.6 பில்லியன்
- இரத்தினபுரியில் இருதய பராமரிப்பு கட்டிடத்தொகுதி நிர்மாணிப்பதற்காக ரூபா 0.4 பில்லியன்
- கராப்பிட்டிய போதனா மருத்துவமனையின் அறுவை சிகிச்சை மருத்துவ பிரிவு நிர்மாணிப்பதற்காக ரூபா 0.45 பில்லியன்

### சுகாதாரத் துறையில் முக்கிய பராமரிப்பு, புனரமைப்பு மற்றும் மேம்பாடு

- மருத்துவமனைகளின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக ரூபா 8.7 பில்லியன்
- மாகாண மருத்துவமனைகளின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக ரூபா 9.9 பில்லியன்
- மாகாண சபைகளின் கீழ் சுகாதாரம் தொடர்பான சொத்துக்களைப் பராமரிப்பதற்காக ரூபா 3.8 பில்லியன்
- உயிரியல் மருத்துவ உபகரணங்களைப் பராமரிப்பதற்காக ரூபா 10.0 பில்லியன்

## பிரதான நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள்



ரூபா **7.5** பில்லியன்

சுமார் 265,000 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து உணவுப் பொதிக்காக



ரூபா **5.0** பில்லியன்

திரிபோஷா திட்டத்திற்காக



ரூபா **4.9** பில்லியன்

சுவசெரிய அம்புலன்ஸ் சேவைக்காக

ரூபா **0.97** பில்லியன்

ஒய்வூதியம் பெறுநருக்கான அக்ரஹார காப்புறுதித் திட்டம்



**வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகள்**

மனநலக் கல்வி மேம்பாடு - ரூபா **0.25** பில்லியன்

# கல்வியில் தரம், சமத்துவம் மற்றும் சிறந்து விளங்குதல்



- 10,191 பாடசாலைகளில் சுமார் 221,698 ஆசிரியர்களை பணியமர்த்துவதன் மூலம் நாடளாவிய ரீதியில் சுமார் 4.1 மில்லியன் மாணவர்களுக்கு தரமான பாடசாலைக் கல்வியை வழங்குதல்
- 19 அரசாங்கப் பல்கலைக்கழகங்களில் 11,073 கல்விசார் பணியாளர்கள் மற்றும் ஏறக்குறைய 12,877 கல்வி சாரா ஊழியர்களைக் கொண்டு 173,118 பல்கலைக்கழக மாணவர்களுக்கு உயர் கல்வியை வழங்குதல்
- சுமார் 110,000 மாணவர்களுக்கு தொழிற்கல்வி வழங்குதல்.

**2025**
**இற்கு**
**ரூபா 620**
**பில்லியன்**

மீண்டெலும் செலவினம்
ரூபா **521.0** பில்லியன்

மூலதன செலவினம்
ரூபா **99.3** பில்லியன்

ரூபா **458.0** பில்லியன்
பாடசாலை கல்வி

ரூபா **135.5** பில்லியன்
பல்கலைக்கழகக் கல்வி

ரூபா **15.6** பில்லியன்
தொழிற் கல்வி

ரூபா **5.3** பில்லியன்
விஞ்ஞான மற்றும் தொழிநுட்பம்

ரூபா **1.3** பில்லியன்
தம்ம பாடசாலை கல்வி

ரூபா **4.5** பில்லியன்
ஆரம்பக் கல்வி

**ரூபா 458.0 பில்லியன்**

**பாடசாலை கல்வி**

| | | | | |
|---|---|---|---|---|
| பாடசாலை கல்வி தொடர்பான ஊழியர்களுக்கு சம்பளம் | - | ரூபா | 316.6 | பில்லியன் |
| க.பொ.த. சா/த, உ/த மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் உள்ளிட்ட பாடசாலை பரீட்சைகளை நடாத்துதல் | - | ரூபா | 8.9 | பில்லியன் |
| பிரிவனாக் கல்வி வழங்குதல் | - | ரூபா | 7.4 | பில்லியன் |
| உதவியளிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு ஒத்துழைப்பு | - | ரூபா | 3.1 | பில்லியன் |
| தொழில்நுட்பப் பிரிவுக்கான தேசிய கல்வியியல் கல்லூரியை நிறுவுதல் | - | ரூபா | 2.5 | பில்லியன் |
| தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் | - | ரூபா | 2.5 | பில்லியன் |
| பொதுக் கல்வி நவீனமயமாக்கல் கருத்திட்டம் | - | ரூபா | 4.3 | பில்லியன் |
| இரண்டாம் நிலை கல்வித் துறை மேம்பாட்டுத் நிகழ்ச்சித்திட்டம் - SESIP | - | ரூபா | 2.4 | பில்லியன் |
| தற்பொழுது இடம்பெறும் பாடசாலை உட்கட்டமைப்பு அபிவிருத்தியினை நிறைவுசெய்தல் | - | ரூபா | 7.92 | பில்லியன் |

**ரூபா 135.5 பில்லியன்**

**பல்கலைக்கழகக் கல்வி**

| | | | | |
|---|---|---|---|---|
| பல்கலைக்கழக பணியாளர் சம்பளங்கள் | - | ரூபா | 60.5 | பில்லியன் |
| விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனிதவள அபிவிருத்திக் கருத்திட்டம் | - | ரூபா | 12.3 | பில்லியன் |
| சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தை தாபித்தல் | - | ரூபா | 6.6 | பில்லியன் |
| கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுகாதாரப் பராமரிப்பு விஞ்ஞான பீட கட்டிடத்தொகுதி | - | ரூபா | 2.4 | பில்லியன் |
| வயம்ப பல்கலைக்கழக நகர அபிவிருத்தி கருத்திட்டம் ரூபா | - | ரூபா | 1.9 | பில்லியன் |
| ருஹுணு பல்கலைக்கழகத்தில் இணைந்த சுகாதார அறிவியல் பீடம் மற்றும் ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் ஆய்வுகூட வசதிகளை மேம்படுத்தல் | - | ரூபா | 0.44 | பில்லியன் |
| கராப்பிட்டிய மருத்துவமனையில் பேராசிரியர் பிரிவைத் தாபித்தல் | - | ரூபா | 0.5 | பில்லியன் |
| ருஹுணு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கான 12 மாடி கட்டிடம் | - | ரூபா | 0.8 | பில்லியன் |
| சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கான பங்கு நிதி | - | ரூபா | 8.4 | பில்லியன் |
| தெற்காசிய தொழில்நுட்பம் மற்றும் மருத்துவ நிறுவனத்திற்கு பங்கு நிதி (SAITM) | - | ரூபா | 2.9 | பில்லியன் |
| பல்கலைக்கழகங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகள் | - | ரூபா | 10.5 | பில்லியன் |

**ரூபா 15.6 பில்லியன்**

**தொழிற் கல்வி**

| | | | | |
|---|---|---|---|---|
| கொழும்பு தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் கம்பஹா தொழில்நுட்பக் கல்லூரியை நிறுவுவதற்கு (K-TEC இன் நிறைவுக்குப் பிந்திய ஆதரவு) | - | ரூபா | 0.49 | பில்லியன் |
| TVET தொழில் தள கருத் திட்டத்திற்கு | - | ரூபா | 0.31 | பில்லியன் |
| சுய வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு முயற்சி (SEPI) திட்டத்திற்கு | - | ரூபா | 0.35 | பில்லியன் |
| தொழிற் கல்வி தொழில்நுட்ப பல்கலைக்கழகம் | - | ரூபா | 1.80 | பில்லியன் |
| இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் | - | ரூபா | 0.75 | பில்லியன் |
| வாழ்க்கைத் தொழில்பயிற்சி அதிகாரசபை | - | ரூபா | 2.20 | பில்லியன் |

**ரூபா 1.3 பில்லியன்**

**தம்ம பாடசாலை கல்வி**

| | | | | |
|---|---|---|---|---|
| அனைத்து மதத்தினருக்கும் தம்ம பாடசாலை வசதிக்காக | - | ரூபா | 0.6 | பில்லியன் |
| அனைத்து மதத்தினருக்கும் பரீட்சைகள் மற்றும் போட்டிகள் உள்ளிட்ட சமய மற்றும் தம்ம பாடசாலை நடவடிக்கைகளுக்கு | - | ரூபா | 0.14 | பில்லியன் |

# முக்கிய பராமரிப்பு, புனரமைப்பு மற்றும் மேம்பாடு

## பொதுக் கல்வி



- **ரூபா 1.2 பில்லியன்** பாடசாலைகளின் வசதிகளை மேம்படுத்த
- **ரூபா 5.7 பில்லியன்** மாகாண சபைகளின் கீழுள்ள கல்வி தொடர்பான சொத்துக்களை பராமரிக்க
- **ரூபா 9.1 பில்லியன்** மாகாண சபைகளின் கீழுள்ள பாடசாலை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக
- **ரூபா 1.0 பில்லியன்** தேசிய கல்விக் கல்லூரிகளின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக
- **ரூபா 0.40 பில்லியன்** ஆசிரியர் கல்லூரிகள் மற்றும் நிலையங்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக
- **ரூபா 2.79 பில்லியன்** இரண்டாம் நிலை கல்விக்கான பாடசாலை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக

## வாழ்க்கைத் தொழிற் கல்வி



- **ரூபா 0.03 பில்லியன்** தொழிநுட்பக் கல்வியியல் கல்லூரிகளின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக
- **ரூபா 0.04 பில்லியன்** தொழிநுட்பக்கல்வி மற்றும் பயிற்சி, புனரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக
- **ரூபா 0.50 பில்லியன்** 7 தொழிநுட்பக் கல்வியியல் கல்லூரிகள் / தொழிநுட்பக் கல்லூரிகளின் நவீனமயப்படுத்தலுக்காக
- **ரூபா 0.056 பில்லியன்** திறன் விருத்தி தொழிற்கல்வி புனரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக

## மற்றவை

- **ரூபா 0.23 பில்லியன்** கோள் மண்டலத்தின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக






**வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகள்**

### ஆரம்பக் கல்வியின் நவீனமயமாக்கல்
- ரூபா **0.50** பில்லியன்

- உயர் தர பல்கலைக்கழகங்களில் இளங்கலைப் படிப்புகளைத் தொடர்வதற்கான உதவித்தொகை, முன்பள்ளி ஆசிரியர் கொடுப்பனவு, ஐந்தாம் தர புலமைப்பரிசில் உதவித்தொகை கொடுப்பனவு அதிகரிப்பு, நிபுணத்துவ சிசுதிரிய தொழில் பயிற்சி அதிகரிப்பிற்கான கொடுப்பனவு போன்ற வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கான ஒதுக்கீடுகள் முக்கிய நலத்திட்டங்களின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன.

# பிரதான நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள்

ரூபா 11.5 பில்லியன் – பாடசாலைகள், தொழிற்கல்வி மற்றும் உயர்கல்வி பருவகால டிக்கெட்டுகளுக்கான மானியம்

ரூபா 0.23 பில்லியன் – விளையாட்டுப் பாடசாலை களுக்கு போசாக்கு உணவு வழங்கல்



நிபுணதா சிசு திரிய நிகழ்ச்சி திட்டம் – ரூபா 0.9 பில்லியன்

அரச பல்கலைக் கழகங்களில் இணைய முடியாத மாணவர்களுக்கான கடன் திட்டம் – ரூபா 2.78 பில்லியன்



ரூபா 32.1 பில்லியன் – பாடசாலை ஊட்டச்சத்து உணவு நிகழ்ச்சி திட்ட ம்



ரூபா 0.2 பில்லியன் – பிற நாடுகளின் உதவித் தொகையுடனான கல்வித் திட்டம்

பாடசாலை சீருடைகள் – ரூபா 6.4 பில்லியன்



பல்கலைக்கழக மாணவர்களுக்கான மஹாபோலா மற்றும் உதவித்தொகை – ரூபா 4.6 பில்லியன்

ரூபா 2.5 பில்லியன் – மிகவும் கஷ்டமான பாடசாலைகள் மற்றும் பிரிவேனாவில் உள்ள மாணவர்களுக்கு காலணிகள்



ரூபா 0.15 பில்லியன் – தம்மப் பாடசாலை பாடப் புத்தகங்களை அச்சிடுதல்

பெண் மாணவர்களுக்கு சுகாதார துவாய்கள் – ரூபா 1.4 பில்லியன்



அனைத்து மதங்களையும் சேர்ந்த அறநெறி ஆசிரியர்களுக்கு வசதியளித்தல் – ரூபா 0.94 பில்லியன்



ரூபா 15.5 பில்லியன் – பாடப்புத்தகங்களை அச்சிடுதல்




ரூபா 1.05 பில்லியன் – ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்கான குரு அபிமானி- கொடுப்பனவு

புலமைப பரிசில்கள் (ஆண்டு 5) – ரூபா 1.95 பில்லியன்



ஆரம்ப பாடசாலை குழந்தைகளுக்கான காலை உணவு – ரூபா 3.2 பில்லியன்




ரூபா 2.0 பில்லியன் – பாடசாலை எழுதுபொருட்கள் கொள்வனவு

ரூபா 2.4 பில்லியன் – சுரக்ஷா காப்புறுதித் திட்டம்

# பாதுகாப்பான, வினைத்திறனான, சுற்றுச்சூழல் நட்பு மற்றும் நிலைபேறான போக்குவரத்து சேவைகள்



- நாடுமுழுவதிலும்வியாபித்துள்ளசுமார் **12,500கி.மீ.தேசியநெடுஞ்சாலைகள்,** சுமார் **12,800 கி.மீ. மாகாண வீதிகள்,** சுமார் **100,000 கி.மீ கிராமப்புற வீதிகளை** பராமரித்தல், புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தலுடன் ஏனைய வீதிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.
- சுமார் **50 கி.மீ. அதிவேக நெடுஞ்சாலைகள்** கட்டுமானம்
- தினசரி சுமார் **320 புகையிரதங்களை** இயக்குதல், பராமரித்தல், புனரமைத்தல் மற்றும் சுமார் **1,550 கி.மீ. புகையிரத பாதைகளை,** சமிக்ஞைகளை மற்றும் புகையிரத ஊர்திகளை மேம்படுத்துதல்
- காங்கேசன்தறை துறைமுகம் மற்றும் ஹிங்குராக்கொட விமான நிலையத்தின் கட்டுமானம்
- இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகளை பராமரித்தல்

**2025 இற்கு ரூபா 499 பில்லியன்**

மீண்டெலும் செலவினம் ரூபா **49.0** பில்லியன்

மூலதன செலவினம் ரூபா **450.3** பில்லியன்

ரூபா **363.3** பில்லியன்
மூலதனம்-ரூபா 354.8 பில்லியன்
மீண்டுவரும்-ரூபா 8.5 பில்லியன்
வீதிகள்

ரூபா **24.4** பில்லியன்
பாலங்கள்

ரூபா **75.0** பில்லியன்
மூலதனம்-ரூபா 43.6 பில்லியன்
மீண்டுவரும்-ரூபா 31.4 பில்லியன்
புகையிரதம்

ரூபா **25.4** பில்லியன்
மூலதனம்-ரூபா 17.1 பில்லியன்
மீண்டுவரும்-ரூபா 8.3 பில்லியன்
போக்குவரத்து

ரூபா **11.4** பில்லியன்
மூலதனம்-ரூபா 10.5 பில்லியன்
மீண்டுவரும்-ரூபா 0.9 பில்லியன்
துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள்

# பிரதான செலவின வகைகள்

**ரூபா 363.3 பில்லியன்**
மூலதனம்-ரூபா 354.8 பில்லியன்
மீண்டுவரும்-ரூபா 8.5
வீதிகள்

| | |
|---|---|
| இங்குருகடே சந்தியிலிருந்து துறைமுக நகரம் வரையிலான துறைமுக அணுகல் உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை திட்டம் (5.3 கி.மீ) | - ரூபா **23.9** பில்லியன் |
| கடவத்தை முதல் மீரிகம வரையிலான மத்திய அதிவேக நெடுஞ்சாலை பிரிவு 01க்கு | - ரூபா **81.3** பில்லியன் |
| மத்திய அதிவேக நெடுஞ்சாலை பிரிவு I இல் கடவத்தையில் இடம் மாறும் தொகுதி மற்றும் மீரிகம நோக்கி 500 மீட்டர் நெடுஞ்சாலையை நிர்மாணித்தல் | - ரூபா **5.0** பில்லியன் |
| துறைமுக அணுகல் உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலைக்கு அணுகலை வழங்குவதற்காக சாய்வுதளத்துடன் கூடிய புறக்கோட்டை மற்றும் அளுத்மாவத்தை இடம்மாறல் | - ரூபா **4.5** பில்லியன் |
| பொத்துஹெர முதல் ரம்புக்கனை வரையிலான மத்திய அதிவேக நெடுஞ்சாலை பிரிவு 03 | - ரூபா **34.0** பில்லியன் |
| அம்பாறை-உஹன சாலையின் புனரமைப்புக்கு (33+000 – 45+000 கி.மீ மற்றும் 45+000-58+780 கி.மீ) செங்கலடி சந்தியை மேம்படுத்துவதற்கு | - ரூபா **1.20** பில்லியன் |
| கொடகம வீதி பிரிவு குறிச்சங்கேணி பாலம் ,அம்பத்தலே வீதி - ஒருகொடவத்த 4/1 பாலம் கட்டுமானம் | - ரூபா **2.30** பில்லியன் |
| பிபிலை-லுணுகல வீதி மற்றும் பெரகல வெல்லவாய வீதியின் புனரமைப்பு மற்றும் பதுளை பிபிலை வீதி சாய்வு பாதுகாப்பு நடவடிக்கைகள் | - ரூபா **1.50** பில்லியன் |
| கொழும்பு மாவட்ட வீதி அபிவிருத்தி திட்டம் | - ரூபா **1.80** பில்லியன் |
| நெரிசலைக் குறைப்பதற்காக பிரதான வீதி மற்றும் அதிவேக நெடுஞ்சாலைகளை அணுகுவதற்கான மாற்று வீதி வலையமைப்பை உருவாக்குதல் மற்றும் கையிருப்பில் உள்ள நிலுவைகளைத் தீர்த்தல் மற்றும் வீதி மறுசீரமைப்பின் முக்கியமான செயல்பாடுகளை நிறைவு செய்தல் | - ரூபா **15.0** பில்லியன் |
| கிராமப்புற வீதிகளின் அபிவிருத்திக்கு | - ரூபா **4.0** பில்லியன் |
| A 17 வீதி வழித்தடத் திட்டத்தின் புனரமைப்பு (றக்குவானை - சூரியகந்த பிரிவு) மற்றும் வல்கம தியகம வீதி | - ரூபா **3.70** பில்லியன் |
| வீதிகள் மற்றும் பாலங்களை நிர்மாணிப்பதற்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கான இழப்பீடு செலுத்துதல் | - ரூபா **9.50** பில்லியன் |
| மாகாண சபைகளின் கீழ் உள்ள வீதிகளை பராமரித்தல் | - ரூபா **8.90** பில்லியன் |
| மாகாண சபைகளின் கீழ் உள்ள வீதிகளை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் | - ரூபா **10.30** பில்லியன் |
| இரத்தினபுரி, மாத்தளை, அனுராதபுரம், குருநாகல், மொனராகலை, புத்தளம், ஹம்பாந்தோட்டை, களுத்துறை, மட்டக்களப்பு, கொழும்பு, பொலன்னறுவை, காலி, கண்டி, மாத்தறை மற்றும் வட மாகாணத்தின் 5 மாவட்டங்களில் சுமார் 1000 கி.மீ கிராமப்புற வீதிகளை மேம்படுத்துதல் | - ரூபா **18.00** பில்லியன் |
| வீதிகளை நிர்மாணித்தல், புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக வீதி அபிவிருத்தி சபையால் பெறப்பட்ட கடன்களை செலுத்தல் | - ரூபா **66.5** பில்லியன் |

**ரூபா 24.4 பில்லியன்**
பாலங்கள்

| | |
|---|---|
| கொஹுவல மற்றும் கெட்டம்பேயில் மேம்பாலங்களை வடிவமைத்து நிர்மாணித்தல் | - ரூபா **10.90** பில்லியன் |
| உத்தரானந்த மாவத்தை மற்றும் கொம்பனித் தெரு புகையிரத நிலையத்தில் உள்ள புகையிரத பாதையில் மேம்பாலங்களை நிர்மாணித்தல் | - ரூபா **2.50** பில்லியன் |
| நாடு முழுவதும் கிராமப்புற பாலங்களை நிர்மாணித்தல் | - ரூபா **1.5** பில்லியன் |
| பழைய பாலத்தின் கூறுகளைப் பயன்படுத்தி கிராமப்புற பாலங்களை நிர்மாணித்தல் (சுமார் 40 பாலங்கள்) | - ரூபா **1.0** பில்லியன் |
| யட்டியந்தோட்டை - மாகம்மன வீதியிலுள்ள உள்ள கரகொட பாலத்தை புனரமைத்தல் | - ரூபா **0.30** பில்லியன் |

## ரூபா 75.0 பில்லியன்

மூலதனம்-ரூபா 43.6 பில்லியன்

மீண்டுவரும்-ரூபா 31.4 பில்லியன்

### புகையிரதம்

| | |
|---|---|
| களனி புகையிரத பாலத்தை மாற்றீடு செய்தல் | - ரூபா 1.20 பில்லியன் |
| 30 டேங்க் வேகன்கள் மற்றும் 20 டிராக் வேகன்கள், 06 டீசல் மல்டிபிள் யூனிட்கள் மற்றும் 10 லோகோமோட்டிவ்கள் வாங்குவதற்கு | - ரூபா 1.35 பில்லியன் |
| கொள்வனவு செய்யப்பட்ட 160 பயணிகள் பெட்டிகள் மற்றும் ரத்மலானை பணிமனையை மேம்படுத்துதல், பொல்கஹவெல - குருநாகல் வரையிலான புகையிரத பாதையின் இரட்டை தடம், மஹோ - ஓமந்தை வரையிலான புகையிரத பாதையை புனரமைத்தல் மற்றும் சமிக்ஞைகளை நிறுவுதல் | - ரூபா 8.0 பில்லியன் |
| கொழும்பு புறநகர் ரயில்வே செயல்திறன் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் புகையிரத சேவைகளுக்கு இலத்திரனியல் பயணச்சீட்டு முறையை அறிமுகப்படுத்துதல் மற்றும் மருதானை ரயில் கட்டுப்பாட்டு மையத்தை நிர்மாணித்தல், ரத்மலானையில் ரயில் பட்டறையை புதுப்பித்தல் -ரூபா 11.5 பில்லியன் | - ரூபா 11.50 பில்லியன் |
| புகையிரத எரிபொருள் கொள்வனவு- ரூபா 15.0 பில்லியன் | - ரூபா 15.0 பில்லியன் |

| | |
|---|---|
| இலங்கை போக்குவரத்து சபைக்கு 600 பேருந்துகளை கொள்வனவு செய்தல் | - ரூபா 3.0 பில்லியன் |
| ஓட்டுநர் அனுமதிப் பத்திரங்களை அச்சிடுதல் | - ரூபா 1.2 பில்லியன் |
| கண்டி பல்முனைய போக்குவரத்து முனையத்தை நிர்மாணித்தல் | - ரூபா 7.7 பில்லியன் |
| மின்னிலத்திரனியல் மோட்டார் திட்டம் | - ரூபா 0.85 பில்லியன் |
| போக்குவரத்து மீறல்களைக் கட்டுப்படுத்த மின்னிலத்திரனியல் அமைப்பை செயல்படுத்தல் | - ரூபா 0.50 பில்லியன் |

## ரூபா 25.4 பில்லியன்

மூலதனம்-ரூபா 17.1 பில்லியன்

மீண்டுவரும்-ரூபா 8.3 பில்லியன்

### போக்குவரத்து

## ரூபா 11.4 பில்லியன்

மூலதனம்-ரூபா 10.5 பில்லியன்

மீண்டுவரும்-ரூபா 0.9 பில்லியன்

### துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள்

| | |
|---|---|
| ஹிங்குராக்கொடை சர்வதேச விமான நிலைய மேம்பாட்டுத் திட்டம் | - ரூபா 1.20 பில்லியன் |
| மேற்கு கொள்கலன் முனையம் II - கொழும்பு துறைமுக விரிவாக்கத் திட்டம் கட்டம் II க்கான மேற்கு அலை தாங்கி விரிவாக்கத்திற்கான விரிவான வடிவமைப்பு | - ரூபா 0.50 பில்லியன் |
| காங்கேசன்துறை துறைமுகத்தின் புனரமைப்பு | - ரூபா 3.45 பில்லியன் |

### வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகள்

| | |
|---|---|
| ■ வட மாகாணத்தில் கிராமிய வீதிகளை மேம்படுத்துதல் | ரூபா 4.5 பில்லியன் |
| ■ ஏனைய மாகாணங்களில் கிராமிய வீதிகளை மேம்படுத்துதல் | ரூபா 3.0 பில்லியன் |
| ■ வட மாகாணத்தில் கிராமிய பாலங்களை மேம்படுத்துதல் | ரூபா 0.5 பில்லியன் |
| ■ ஏனைய மாகாணங்களில் கிராமிய பாலங்களை மேம்படுத்துதல் | ரூபா 1.0 பில்லியன் |
| ■ முல்லைத்தீவில் வட்டுவாகல் பாலம் நிர்மானம் | ரூபா 1.0 பில்லியன் |
| ■ புகையிரத பயணிகள் பெட்டிகளைப் புதுப்பித்தல் மற்றும் புதிய புகையிரதப் பெட்டிகளைத் தயாரித்தல். | ரூபா 0.75 பில்லியன் |
| ■ அவிசாவளை முதல் களனிப்பள்ளத்தாக்கு புகையிரத பாதை நிர்மானம் | ரூபா 0.25 பில்லியன் |
| ■ விவசாயப் பொருட்களுக்கான புகையிரதப் போக்குவரத்து | ரூபா 0.1 பில்லியன் |
| ■ பொதுப் போக்குவரத்து நவீனமயமாக்கல் (தாழ் தள பேருந்து கொள்வனவு) | ரூபா 3.0 பில்லியன் |
| ■ கெரவலப்பிட்டி சுங்க சேவை வசதிப் பூங்கா | ரூபா 0.5 பில்லியன் |
| ■ வேயங்கொடையில் உள்ளகக் கொள்கலன் உலர் துறைமுகம் | ரூபா 0.5 பில்லியன் |
| ■ ஒற்றைச் சாளர மற்றும் துறைமுக சமுதாய முறைமை | ரூபா 0.5 பில்லியன் |
| ■ பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் உயர்தர ஸ்கேனிங் முறைமை | ரூபா 1.0 பில்லியன் |

# பராமரிப்பு, புனரமைப்பு மற்றும் மேம்பாடு

## பாதைகள்

| | | |
|---|---|---|
| சுமார் 12,500 கி.மீ நீளமுள்ள தேசிய வீதி வலையமைப்பின் பராமரிப்பு மற்றும் மேம்பாடு | - ரூபா 31.5 | பில்லியன் |
| தேசிய வீதி வலையமைப்பின் தேர்ந்தெடுக்கப்பட்ட வீதி பிரிவுகளை அகலமாக்குதலும் மேம்படுத்துதலும் | - ரூபா 12.0 | பில்லியன் |
| மாகாண சபைகளின் கீழ் வரும் வீதிகளைப் பராமரித்தல் | - ரூபா 8.1 | பில்லியன் |
| மாகாண வீதி வலையமைப்பின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு | - ரூபா 10.3 | பில்லியன் |



## பாலங்கள்

| | | |
|---|---|---|
| தேசிய நெடுஞ்சாலைகளில் சேதமடைந்த/ பலவீனமான பாலங்களை புனரமைத்தல் | - ரூபா 4.3 | பில்லியன் |



## புகையிரத பாதை

| | | |
|---|---|---|
| புதிய தண்டவாளங்கள் மற்றும் ஸ்லீப்பர்களுடன் புகையிரத பாதையை புனரமைத்தல் | - ரூபா 3.4 | பில்லியன் |
| புகையிரத பாதை மற்றும் சமிக்ஞை அமைப்பை மேம்படுத்துதல் | - ரூபா 12.2 | பில்லியன் |
| புகையிரத பாதை மற்றும் சமிக்ஞை அமைப்பைப் பராமரித்தல் | - ரூபா 0.25 | பில்லியன் |



# பிரதான நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள்

**ரூபா 2.2 பில்லியன்**

சமூக ரீதியாகக் கடமையாக்கப்பட்டுள்ள பேருந்து சேவையின் (சிசுசரிய, கமிசரிய, நிசிசாரிய மற்றும் இரவு நேரப் பேருந்து சேவை) பங்களிப்பு

**ரூபா 2.0 பில்லியன்**

பொருளாதார ரீதியாக இலாபம் ஈட்டாத பாதைகளில் ஒரு நாளைக்கு 270,000 கி.மீ. தூரத்திற்கு சுமார் 1,500 இ.போ, ச. பேருந்துகளை இயக்குதல்

# கண்ணியமான, வசதியான வாழ்க்கையின் ஆவலுக்கான ஒத்துழைப்பு



- நடுத்தர காலத்தில் சுமார் 1 மில்லியன் புதிய குழாய் நீர் விநியோக இணைப்புகளை வழங்குதல்
- 3.1 மில்லியன் வீடுகள், தொழிற்சாலைகள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு தற்போதுள்ள சுமார் 342 நீர் விநியோகத் திட்டங்கள் மூலம் தடையற்ற பாதுகாப்பான குழாய் மூல குடிநீர் வழங்கல்
- நாடு முழுவதும் சுமார் 3,780 சமூக நீர் விநியோகத் திட்டங்களின் நிலைபேர்த்தன்மையை உறுதி செய்தல்
- குறைந்த வருமானம் கொண்ட மக்களை இலக்காகக் கொண்டு சுமார் 16,570 வீட்டு அலகுகளின் கட்டுமான நடவடிக்கைகளைத் தொடர்தல்
- நாடு முழுவதும் கிராமப்புற உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல்

**2025 இற்கு ரூபா 185 பில்லியன்**

மீண்டெழும் செலவினம் ரூபா **11.0** பில்லியன்

மூலதன செலவினம் ரூபா **174.0** பில்லியன்

ரூபா **109.7** பில்லியன்
மீண்டுவரும்- ரூபா 0.8 பில்லியன்
மூலதனம்- ரூபா 108.9 பில்லியன்
குடிநீர் வழங்கல்

ரூபா **41.2** பில்லியன்
மீண்டுவரும் - ரூபா 1.8 பில்லியன்
மூலதனம் - ரூபா 39.4 பில்லியன்
வீடமைப்பு

ரூபா **16.1** பில்லியன்
கிராமபுற அபிவிருத்தி

ரூபா **12.0** பில்லியன்
மீண்டுவரும் – ரூபா 7.1 பில்லியன்
மூலதனம் – ரூபா 4.9 பில்லியன்
இளைஞர் மற்றும் விளையாட்டு

ரூபா **5.7** பில்லியன்
மீண்டுவரும்- ரூபா 1.2 பில்லியன்
மூலதனம் – ரூபா 4.5 பில்லியன்
நகர்புற பகுதிகளில் கட்டிட மேம்பாடு

# பிரதான செலவின வகைகள்

**ரூபா 109.7 பில்லியன்**
மீண்டுவரும்- ரூபா 0.80 பில்லியன்
மூலதனம்- ரூபா 108.9 பில்லியன்
குடிநீர் வழங்கல்

| | | | |
|---|---|---|---|
| முல்லைத்தீவு, கிளிநொச்சி, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி, கேகாலை, நுவரெலியா, மாத்தறை, குருநாகல், கம்பஹா, மாத்தளை மாவட்டங்களுக்கு நீர் வழங்கல் | - ரூபா | 2.3 | பில்லியன் |
| யாழ்ப்பாணம் கிளிநொச்சி நகரங்களுக்கு நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டுக் கருத்திட்டம் | - ரூபா | 5.4 | பில்லியன் |
| ருவன்வெல்ல மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு குழாய் மூலம் நீர் வழங்குதல் | - ரூபா | 3.7 | பில்லியன் |
| பத்ததும்பர, பூஜாபிட்டிய, அக்குரணை, ஹரிஸ்பத்துவ, கங்கவட்ட கோரளை மற்றும் தும்பனை பிரதேச செயலக பிரிவுகளுக்கு (கண்டி வடக்கு மற்றும் பாத்ததும்பற ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்) குழாய் மூலம் நீர் வழங்கல் | - ரூபா | 7.5 | பில்லியன் |
| பதவிய, கெபிதிகொல்லாவ கஹட்டகஸ்திகிலிய, ஹொரவ்பொத்தானை மற்றும் ரம்பாவை பிரதேச செயலக பிரிவுகளுக்கு குழாய் மூலம் நீர் வழங்கல் (அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் திட்டம் கட்டம் 11) | - ரூபா | 6.4 | பில்லியன் |
| மேல் மாகாணத்தின் தெற்குப் பகுதியில் நீர் வழங்கல் திறனை அதிகரித்தல், பாதுகாப்பான குடிநீர் வழங்கல், தெஹிவளை மற்றும் மொரட்டுவையில் நீர் வழங்கல் வலையமைப்புகளை மேம்படுத்துதல்(களுகங்கை நீர் வழங்கல் விரிவாக்கல் கருத்திட்டம் (1) | - ரூபா | 5.5 | பில்லியன் |
| அம்பத்தலே நீர் வழங்கல் திட்ட மேம்பாடு மற்றும் எரிசக்தி சேமிப்பு கருத்திட்டம் | - ரூபா | 3.4 | பில்லியன் |
| புதிய நீர் இணைப்புகளை வழங்குவதற்காக தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்களின் திறனை விரிவுபடுத்தல் | - ரூபா | 9.3 | பில்லியன் |
| சமூக நீர் வழங்கல் திட்டங்களின் மேம்பாடு | - ரூபா | 2.7 | பில்லியன் |
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபைக்கு பங்கு நிதியளிப்பு | - ரூபா | 38.0 | பில்லியன் |
| படுகடன் மீள்கட்டமைப்பின் மூலம் இடைநிறுத்தப்பட்ட நீர்க்கருத்திட்டங்களை மீள ஆரம்பித்தல் | - ரூபா | 20.0 | பில்லியன் |

**ரூபா 41.2 பில்லியன்**
மீண்டுவரும் - ரூபா 1.8 பில்லியன்
மூலதனம் - ரூபா 39.4 பில்லியன்
வீடமைப்பு

| | | | |
|---|---|---|---|
| கொழும்பு நகரம் மற்றும் அதன் அருகிலுள்ள புறநகர்ப் பகுதிகளில் குறைந்த வசதிகள் கொண்ட குடியிருப்புகளை இடமாற்றம் செய்வதற்கான நகர்ப்புற மறுமலர்ச்சி கருத்திட்டம் | - ரூபா | 18.0 | பில்லியன் |
| கொழும்பின் பல்வேறு புறநகர்ப் பகுதிகளில் குறைந்த வருமானம் கொண்ட தனிநபர்களுக்கு மலிவு விலையில் வீடுகளை வழங்கல் | - ரூபா | 7.0 | பில்லியன் |
| மோதல்களால் பாதிக்கப்பட்ட பகுதியில் வசிக்கும் குடும்பங்களுக்கு மீள்குடியேற்றம்/ நிரந்தர வீடுகள் | - ரூபா | 3.5 | பில்லியன் |
| தோட்ட மக்களுக்கு வீடு வசதிகள் வழங்கல் | - ரூபா | 4.6 | பில்லியன் |

**ரூபா 16.1 பில்லியன்**
கிராமபுற அபிவிருத்தி

| | | | |
|---|---|---|---|
| கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கருத்திட்டம் (வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம், வடமத்திய மாகாணம் மற்றும் ஊவா மாகாணம்) | - ரூபா | 6.0 | பில்லியன் |
| உள்ளூராட்சி அதிகார சபைகளின் திறன்களை வலுப்படுத்தி, சமூகங்களுக்கு சேவைகளை பொறுப்புணர்வுடன் வழங்கவும், பொருளாதார உள்கட்டமைப்பு மேம்பாட்டை ஆதரிக்கவும் | - ரூபா | 1.5 | பில்லியன் |
| பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கு பங்களிக்கும் வகையில் மாகாணங்களில் சமூக-பொருளாதார நிலையை மேம்படுத்தல் (பிரமான அடிப்படையிலான மானியங்கள்) | - ரூபா | 6.3 | பில்லியன் |



ரூபா **12.0** பில்லியன்

மீண்டுவரும் – ரூபா 7.1 பில்லியன்

மூலதனம் – ரூபா 4.9 பில்லியன்

இளைஞர் மற்றும் விளையாட்டு

| | |
|---|---|
| வடமேல், ஊவா, வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய விளையாட்டு வளாகங்களை நிர்மாணித்தல் | - ரூபா **0.88** பில்லியன் |
| மன்னார், பொலனறுவை, களுத்துறை, காலி மற்றும் மாத்தறை ஆகிய 05 மாவட்ட விளையாட்டு வளாகங்களை நிர்மாணித்தல் | - ரூபா **0.44** பில்லியன் |
| பாடசாலை மற்றும் வெளியூர் கிரிக்கெட்டின் மேம்பாட்டிற்கு | - ரூபா **0.1** பில்லியன் |
| சர்வதேச மற்றும் தேசிய விளையாட்டுகள் | - ரூபா **0.7** பில்லியன் |
| சுகததாச தேசிய விளையாட்டு வளாக சபை | - ரூபா **1.0** பில்லியன் |
| தேசிய இளைஞர் படையணி | - ரூபா **1.63** பில்லியன் |
| தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ரூபா 2.26 பில்லியன் | - ரூபா **2.26** பில்லியன் |



ரூபா **5.7** பில்லியன்

மீண்டுவரும்- ரூபா 1.2 பில்லியன்

மூலதனம் – ரூபா 4.5 பில்லியன்

நகர்புற பகுதிகளில் கட்டிட மேம்பாடு

| | |
|---|---|
| 100 நகரங்களில் (சியக் நகர்) நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நகர மேம்பாடு | - ரூபா **1.8** பில்லியன் |
| யாழ்ப்பாண நகர மண்டபத்தை புனரமைத்தல் | - ரூபா **0.4** பில்லியன் |
| மூலோபாய நகரங்களின் மேம்பாட்டு -அனுராதபுரம் | - ரூபா **1.29** பில்லியன் |
| மூலோபாய நகரங்களின் மேம்பாடு – யாழ்ப்பாணம் | - ரூபா **0.17** பில்லியன் |
| கிழக்கு, மேல் மாகாணங்கள் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் மேம்பாட்டுக்கான பிரதான திட்டத்தை தயாரித்தல் | - ரூபா **0.25** பில்லியன் |




**வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகள்**

| | |
|---|---|
| ■ அரசாங்கத்தால் நிர்மானிக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களின் அத்தியாவசிய பராமரிப்பு | ரூபா 1.0 பில்லியன் |
| ■ கிரிபாவ நீர் வழங்கல் திட்டம் | ரூபா 1.0 பில்லியன் |
| ■ விளையாட்டு கலாசாரத்தினைத் தாபித்தல் | ரூபா 0.5 பில்லியன் |
| ■ அனாதை, குறைந்த வருமானமுடைய, இளம் திருமணமான தம்பதிகளுக்கு புதிய வீடு வாங்குவதற்கு அல்லது கட்டுவதற்கான நிதி உதவி | ரூபா 1.0 பில்லியன் |

# பிரதான பராமரிப்பு, புனரமைப்பு மற்றும் மேம்பாடு

ரூபா **0.25** பில்லியன்

**வீட்டுத் திட்டங்களைப் புதுப்பித்தல்**



## முக்கிய நலன்புரி திட்டங்கள்

ரூபா **0.4** பில்லியன்

தேசிய அணிகளுக்கான ஊட்டச்சத்து நிகழ்ச்சித் திட்டத்தினை தொடர்தல்



# நாட்டின் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை மேம்படுத்த உற்பத்தித்திறன் கொண்ட, நவீனமயப்படுத்திய நிலைபேறான விவசாயம்



# 2025 இற்கு ரூபா 264 பில்லியன்

மீண்டெலும் செலவினம் ரூபா **99.4** பில்லியன்

மூலதன செலவினம் ரூபா **164.2** பில்லியன்



ரூபா **131.1** பில்லியன்
மீண்டுவரும் – ரூபா 67.6 பில்லியன்
மூலதனம் – ரூபா 63.5 பில்லியன்
விவசாயத்துறை



ரூபா **11.6** பில்லியன்
மீண்டுவரும் – ரூபா 6.2 பில்லியன்
மூலதனம்– ரூபா 5.4 பில்லியன்
மீன்பிடித்துறை



ரூபா **91.7** பில்லியன்
மீண்டுவரும்– ரூபா 11.4 பில்லியன்
மூலதனம்– ரூபா 80.3 பில்லியன்
நீர்ப்பாசனம்



ரூபா **13.7** பில்லியன்
மீண்டுவரும் – ரூபா 7.7 பில்லியன்
மூலதனம்– ரூபா 6.0 பில்லியன்
காணி



ரூபா **3.6** பில்லியன்
மீண்டுவரும்– ரூபா 0.9 பில்லியன்
மூலதனம்– ரூபா 2.7 பில்லியன்
கால்நடை



ரூபா **11.8** பில்லியன்
மீண்டுவரும்– ரூபா 5.4 பில்லியன்
மூலதனம்– ரூபா 6.4 பில்லியன்
தோட்டத்தொழில்

## பிரதான செலவின வகைகள்



ரூபா **131.1** பில்லியன்
மீண்டுவரும் – ரூபா 67.6 பில்லியன்
மூலதனம் – ரூபா 63.5 பில்லியன்
விவசாயத்துறை

| | |
|---|---|
| உணவு நிவாரணத் திட்டம் (WFP) | - ரூபா **1.8** பில்லியன் |
| காலநிலை சாதூர்யமான விவசாய திட்டத்தின் கீழ் குளங்களை நிர்மானிப்பதன் மூலம் தொழில்முனைவோரை மேம்படுத்துதல், | - ரூபா **8.7** பில்லியன் |
| சிறுதொழில் விவசாய வணிக கூட்டமைப்பு திட்டத்தின் (SAAP) கீழ் காலநிலையை எதிர்கொள்ளும் நடவடிக்கைகள் மற்றும் விவசாய தொழில்முனைவோரை மேம்படுத்துதல் | - ரூபா **3.4** பில்லியன் |
| சிறுதொழில் விவசாய வணிக மீள்தன்மைத் திட்டத்தின் (SARP) கீழ் காலநிலையை எதிர்கொள்ளும் நடவடிக்கைகள் மற்றும் விவசாய தொழில்முனைவோரை மேம்படுத்துதல் | - ரூபா **5.9** பில்லியன் |
| தேசிய விதை உற்பத்தி மற்றும் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டம் | - ரூபா **1.2** பில்லியன் |
| விவசாய நிறுவனங்களை உருவாக்குதல் மற்றும் வசதி செய்தல், விவசாய பூங்காக்களை நிர்மாணித்தல், விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் தொழில்முனைவோர் மேம்பாடு | - ரூபா **1.2** பில்லியன் |
| துரித விதைப் பண்ணைகள் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | - ரூபா **0.6** பில்லியன் |
| நெல் சந்தைப்படுத்தல் சபைக்கான கடன் மீளச் செலுத்துதல் | - ரூபா **2.7** பில்லியன் |

## நீர்ப்பாசனம்

ரூபா **91.7** பில்லியன்
மீண்டுவரும்– ரூபா 11.4 பில்லியன்
மூலதனம்– ரூபா 80.3 பில்லியன்

| | |
|---|---|
| வட மத்திய கால்வாய் மற்றும் வயம்ப மகா கால்வாய் கட்டுமானம், மினிப்பே இடது கரை புனரமைப்பு, மகாவெலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நீர்வள மேலாண்மை | - ரூபா **32.5** பில்லியன் |
| மகாவெலி அதிகார சபையால் அணை பாதுகாப்பு, கட்டமைப்புகள், கால்வாய்களைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் | - ரூபா **3.6** பில்லியன் |
| கீழ் மல்வத்துஓயா பல்துறை மேம்பாட்டுத கருத்திட்டம் | - ரூபா **5.0** பில்லியன் |
| சிறிய நீர்ப்பாசனம், கிராம குள அருவித்தொடர் அமைப்புகள் மற்றும் கைவிடப்பட்ட வயல் நிலங்களின் மேம்பாடு | - ரூபா **3.5** பில்லியன் |
| இலங்கையின் நக்கிள்ஸ் மலைத்தொடர் நீரேந்து பகுதிகள் கீழ் நீரோட்டம் பகுதிகளில் மற்றும் ஆற்று வடி நிலங்களில் வாழ்வாதார கட்டமைப்பு மற்றும் விவசாயத் தோட்ட சமூகங்களின் காலநிலை மீள்தன்மையை வலுப்படுத்துதல் | - ரூபா **2.4** பில்லியன் |
| களனி ஆற்றுப் படுகையின் வெள்ள முகாமை, நீர் வானிலை அமைப்பை நவீனமயமாக்குதல், பேரிடர் தயார்நிலை மற்றும் தயார்நிலையை மேம்படுத் துதல், வெள்ள முன்னறிவிப்பை மேம்படுத்துதல், காலநிலை மீள்தன்மை பல-கட்ட நிரல் அணுகுமுறை திட்டத்தின் கீழ் நிலச்சரிவு முன்னறிவிப்பை மேம்படுத்துதல் | - ரூபா **9.0** பில்லியன் |
| உமா ஓயா நீர்த்தேக்க கருத்திட்டம் | - ரூபா **1.9** பில்லியன் |
| யான் ஓயா கருத்திட்டம் | - ரூபா **2.3** பில்லியன் |
| எல்லேவெவ நீர்த்தேக்கம் | - ரூபா **1.0** பில்லியன் |
| எருவெவவிலிருந்து மகாகந்தராவ நீர்த்தேக்கம் வரையிலான கால்வாய் கட்டுமானம் | - ரூபா **0.5** பில்லியன் |
| புவியீர்ப்பு நீர்ப்பாசனப் பணிகள் | - ரூபா **1.8** பில்லியன் |

## மீன்பிடித்துறை

ரூபா **11.6** பில்லியன்
மீண்டுவரும் – ரூபா6.2 பில்லியன்
மூலதனம்– ரூபா 5.4 பில்லியன்

| | |
|---|---|
| கந்தரை மீன்பிடி துறைமுக கட்டுமானம் | - ரூபா **3.7** பில்லியன் |
| காடுகளின் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு | - ரூபா **0.1** பில்லியன் |
| மைலிட்டி மீன்பிடி துறைமுக அபிவிருத்தி | - ரூபா **0.2** பில்லியன் |
| வடக்கு பிராந்தியத்தில் மீன்பிடித் தொழிற்துறை அபிவிருத்தி | - ரூபா **0.28** பில்லியன் |

## தோட்டத்தொழில்

ரூபா **11.8** பில்லியன்
மீண்டுவரும்– ரூபா 5.4 பில்லியன்
மூலதனம்– ரூபா 6.4 பில்லியன்

| | |
|---|---|
| இலங்கை கறுவா தொழிற்துறையை அதிகார சபை புத்துயிர் பெற செய்வதற்கு விவசாயிகளுக்கு உதவுதல் | - ரூபா **0.1** பில்லியன் |
| தேயிலை சிறுதொழில் அபிவிருத்தி அதிகார சபை கீழ் உற்பத்தியை அதிகரித்தல், சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள், உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் மற்றும் தேயிலை சிறுதொழில் உரிமையாளர்களின் நலனுக்காகப் பணியாற்றுதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட மேம்பாட்டு நடவடிக்கைகள் | - ரூபா **0.8** பில்லியன் |
| தெங்கு பயிர்செய்கை சபையின் கீழ் தேங்காய் உற்பத்தி மற்றும் விவசாய உற்பத்தித் திறனை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட மேம்பாட்டு நடவடிக்கைகள் | - ரூபா **0.79** பில்லியன் |
| விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் விவசாய பெறுமதி சங்கிலி மேம்பாடு | - ரூபா **0.27** பில்லியன் |
| தோட்டத் துறையில் உள்கட்டமைப்பு மேம்பாடு | - ரூபா **1.8** பில்லியன் |
| கறுவா நுழைவாயில் | - ரூபா **0.27** பில்லியன் |

## காணி

ரூபா **13.7** பில்லியன்
மீண்டுவரும் – ரூபா 7.7 பில்லியன்
மூலதனம்– ரூபா 6.0 பில்லியன்

| | |
|---|---|
| அரச தேவைகளுக்காக காணி கையகப்படுத்துதல் | - ரூபா **4.0** பில்லியன் |
| பிம் சவிய நிகழ்ச்சித்திட்டம் | - ரூபா **1.0** பில்லியன் |

ரூபா **3.6** பில்லியன்
மீண்டுவரும்– ரூபா 0.9 பில்லியன்
மூலதனம்– ரூபா 2.7 பில்லியன்
கால்நடை

| | |
|---|---|
| மகாவலி அதிகாரசபையின் கால்நடை நிகழ்ச்சித்திட்டங்கள் | - ரூபா **1.4** பில்லியன் |
| மேம்படுத்தப்பட்ட இனப்பெருக்கம் மூலம் திரவ பால் உற்பத்தியை அதிகரித்தல் | - ரூபா **0.1** பில்லியன் |
| சிறு மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை அபிவிருத்தி | - ரூபா **0.25** பில்லியன் |
| ஆடு வளர்ப்பு மூலம் வாழ்வாதார அபிவிருத்தி | - ரூபா **0.2** பில்லியன் |

## முக்கிய நலன்புரி நிகழ்ச்சிதிட்டம்

ரூபா **35.0** பில்லியன்



இரசாயன மற்றும் சேதனப் பசளைக்கான உர மானியத் திட்டம்



ரூபா **5.6** பில்லியன்

விவசாயிகளுக்கான ஓய்வூதியம்

ரூபா **1.0** பில்லியன்




ஏற்றுமதி பயிர் அபிவிருத்திக்காக விவசாயிகளுக்கு உதவுதல்

ரூபா **1.5** பில்லியன்

பயிர் காப்பீட்டுக்கான அரசாங்க பங்களிப்பு

ரூபா **0.5** பில்லியன்



இறப்பருக்கான மானியம்



ரூபா **0.1** பில்லியன்

இலங்கை கருவாத் தொழிலை புத்துயிர் பெறச்செய்ய விவசாயிகளுக்கு உதவுதல்

ரூபா **3.0** பில்லியன்



மீன்பிடித் தொழிலின் மறுமலர்ச்சிக்கான நிதி உதவி

## விவசாய துறையை பராமரித்தல், புனரமைத்தல் மற்றும் மேம்பாடடைய செய்தல்

ரூபா **24.1** பில்லியன்



## விவசாய துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு

ரூபா **9.70** பில்லியன்





ரூபா **24.1** பில்லியன்
விவசாய துறையில் பிரதான பராமரிப்பு, புனரமைப்பு மற்றும் மேம்பாடு

| | |
|---|---|
| தேர்ந்தெடுக்கப்பட்ட பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களில் அத்தியாவசிய புனரமைப்பு | - ரூபா **4.0** பில்லியன் |
| மாகாண நீர்ப்பாசனப் பராமரிப்பு | - ரூபா **2.03** பில்லியன் |
| மாகாண சபைகளின் கீழ் விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடைகள் மற்றும் உள்நாட்டு மீன்பிடித் துறைகளின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு | - ரூபா **12.5** பில்லியன் |



ரூபா **9.7** பில்லியன்
பிரதான ஆராய்ச்சி

| | |
|---|---|
| தேசிய விதை உற்பத்தி மற்றும் கொள்வனவு திட்டம் | - ரூபா **1.2** பில்லியன் |
| துரித விதைப் பண்ணைகள் மேம்பாட்டுத் திட்டம் | - ரூபா **0.6** பில்லியன் |
| பெருந்தோட்டத் துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு | - ரூபா **0.5** பில்லியன் |
| இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம் | - ரூபா **0.49** பில்லியன் |
| தேயிலை ஆராய்ச்சி நிறுவகம் | - ரூபா **0.7** பில்லியன் |
| தென்னை ஆராய்ச்சி நிறுவகம் | - ரூபா **0.45** பில்லியன் |
| தேசிய நீர்வாழ் வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (NARA) | - ரூபா **0.1** பில்லியன் |
| கால்நடை இனப்பெருக்கத் திட்டம் | - ரூபா **0.2** பில்லியன் |
| தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டத்தை செயல்படுத்துதல் | - ரூபா **0.1** பில்லியன் |
| ஹெக்டர் கோப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் சமூக மற்றும் பொருளாதார ஆராய்ச்சி | - ரூபா **0.2** பில்லியன் |
| விவசாய துறையை நவீனமயமாக்கல் மற்றும் காலநிலை சாதூர்யமான நீர்ப்பாசன விவசாய கருத்திட்டத்தில் ஆராய்ச்சி | - ரூபா **2.5** பில்லியன் |



## வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகள்

| | |
|---|---|
| ■ நெல் தாங்கி கையிருப்புகளைப் பராமரித்தல் | ரூபா 6.0 பில்லியன் |
| ■ களப் பயிர்களின் உற்பத்தியை மேம்படுத்துதல் | ரூபா 0.5 பில்லியன் |
| ■ ஏனைய ஏற்றுமதிப் பயிர்களை ஊக்குவித்தல் | ரூபா 0.25 பில்லியன் |
| ■ கல்ஓயா, ராஜாங்கனை, ஹுருலுவெவ மற்றும் மின்னேரியா உள்ளிட்ட முக்கிய நீர்ப்பாசன முறைமைகளின் புனரமைப்பு | ரூபா 2.0 பில்லியன் |
| ■ தெங்கு உற்பத்தி மேம்பாடு மற்றும் வடக்கு முக்கோண நிகழ்ச்சித்திட்டம் | ரூபா 0.5 பில்லியன் |
| ■ நன்னீர் இறால் வளர்ப்பு மற்றும் பாரம்பரியமற்ற மீன்வளர்ப்பு | ரூபா 0.2 பில்லியன் |



## என்றும் பசுமையான வாழ்க்கையை நோக்கி



- தற்போதுள்ள மின்சார வேலிகளில் சுமார் 1,456 கி.மீ ஐ (மொத்தத்தில் 5,611 கி.மீ) புதுப்பித்தல்.
- மீட்டெடுக்கப்பட்ட காடுகளின் பராமரிப்பு (136.5 ஹெக்டேர்), வணிக வன நிறுவல்கள் (800 ஹெக்டேர்), இளம் தோட்ட பராமரிப்பு (1,474 ஹெக்டேர்), வன எல்லையிடல் (1,500 கி.மீ)
- பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் ஆக்கிரமிப்பு,தாவரங்களை அகற்றுதல் மற்றும் புல்வெளி முகாமை
- 2030 ஆம் ஆண்டுக்குள் HCFC தொடர் இரசாயனப் பொருட்களை இறக்குமதி செய்வதைத்தடைசெய்வதற்கான மொன்ட்ரியல் நெறிமுறையைசெயல்படுத்துதல்
- நாடு முழுவதும் உள்ளூராட்சி அதிகார சபைகளில் திடக்கழிவுகளை திறம்பட நிர்வகித்தல்
- கண்டி நகரம் மற்றும் புறநகர்ப் பகுதிகள், இரத்மலானை, மொரட்டுவ,களனி, காலி, பேலியகொடை மற்றும் கொழும்பு மாநகர சபைப் பகுதிகளுக்கு கழிவுநீர் அகற்றல் வசதிகளை வழங்குதல்.

**2025 இற்கு ரூபா 45 பில்லியன்**

மீண்டெழும் செலவினம்
ரூபா **12.9** பில்லியன்

மூலதன செலவினம்
ரூபா **32.1** பில்லியன்

ரூபா **0.80** பில்லியன்
கரையோர பாதுகாப்பு

ரூபா **9.0** பில்லியன்
அனர்த்த முகாமை

ரூபா **7.3** பில்லியன்
சுற்றுச்சூழல் பாதுகாப்பு

ரூபா **2.7** பில்லியன்
வெள்ள நீர் முகாமை

ரூபா **5.7** பில்லியன்
கழிவு முகாமை

ரூபா **5.9** பில்லியன்
வனசீவராசிகள் பாதுகாப்பு

ரூபா **13.7** பில்லியன்
கழிவுநீர் முகாமை

# பிரதான செலவின நடவடிக்கைகள்



ரூபா **9.0** பில்லியன்
அனர்த்த முகாமை

| | |
|---|---|
| பேரிடர்களின் தாக்கத்தைக் குறைப்பதற்கு தணிப்பு கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் | - ரூபா **0.30** பில்லியன் |
| நிலச்சரிவு அச்சுறுத்தல்கள் மற்றும் நிலச்சரிவு காரணமாக இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றல் | - ரூபா **0.50** பில்லியன் |
| பேரிடர் சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கான பாதுகாப்பு மையங்களை மாவட்டங்களில் நிர்மாணித்தல் | - ரூபா **0.05** பில்லியன் |
| வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் புனரமைப்பு மற்றும் மீள்கட்டுமான நடவடிக்கைகள் | - ரூபா **1.0** பில்லியன் |
| நிலச்சரிவு புலனாய்வு , ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு | - ரூபா **0.08** பில்லியன் |
| நிலச்சரிவு தணிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் | - ரூபா **0.12** பில்லியன் |
| தணிப்பு நடவடிக்கைகள் மூலம் நிலச்சரிவு பாதிப்பைக் குறைத்தல் | - ரூபா **3.83** பில்லியன் |
| டாப்ளர் வானிலை ரேடார் அமைப்புகள் | - ரூபா **1.00** பில்லியன் |



ரூபா **7.3** பில்லியன்
சுற்றுச்சூழல் பாதுகாப்பு

| | |
|---|---|
| மொண்ட்ரீயல் நெறிமுறையை செயல்படுத்தல் | - ரூபா **0.05** பில்லியன் |
| விவசாயம், வனவியல் மற்றும் பிற நில பயன்பாட்டுத் துறைகளுக்கான மேம்பட்ட வெளிப்படைத்தன்மை கட்டமைப்பு | - ரூபா **0.10** பில்லியன் |
